**சுருக்கம்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – கடலூர், வேலூர், திருவண்ணாமலை, ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கரூர், மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய 9 மாவட்டங்களிலுள்ள 41 ஊராட்சி ஒன்றிய தலைவர்களின் உபயோகத்தில் இருந்த 41 வாகனங்களில் திருவண்ணாமலை மாவட்டம், அனக்காவூர் ஊராட்சி ஒன்றிய தலைவரின் TN.09 G 2187 Tata Spacio என்ற வாகனத்தினை தவிர்த்து ஏனைய 40 வாகனங்களை முதிரா நிலையில் கழிவுநீக்கம் செய்ய அனுமதி அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி-3) துறை**

**அரசாணை (2ப) எண்.23**

**நாள் 01.04.2023**
**சுபகிருது, பங்குனி 18ந் தேதி**
**திருவள்ளுவர் ஆண்டு 2054**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.2275, உள்(போக்குவரத்து) துறை, நாள் 10.10.1990.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.19119/2020 (PUC)/பரா.1.1, நாள் 17.09.2022

-----

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, வாகனம் வாங்கப்பட்டு 10 வருடங்கள் ஆக வேண்டும் அல்லது பெட்ரோல் வாகனமாக இருந்தால், 2 லட்சம் கி.மீ அல்லது டீசல் வாகனமாக இருந்தால், 2.5 இலட்சம் கி.மீ ஓடியிருக்க வேண்டும். இதில் எது பிந்தியதோ, அப்போது அவ்வாகனம் கழிவு நீக்கம் செய்ய தகுதியுடையதாகும். வாகனம் முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்ய மோட்டார் வாகன பராமரிப்புத்துறை இயக்குநரால் பரிந்துரைக்கப்பட்டிருப்பின், துறைத் தலைவர் மூலமாக அரசுக்கு கருத்துரு அனுப்பி, வாகனம் கழிவு நீக்கம் செய்ய ஆணை பெறப்பட வேண்டும்.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதத்தில், இந்நேர்வில் குறிப்பிடப்பட்டுள்ள 9 மாவட்டங்களிலுள்ள 40 ஊராட்சி ஒன்றியத் தலைவர்களின் உபயோகத்தில் இருந்த வாகனங்கள், வாங்கப்பட்டு 10 வருடங்கள் ஆகியிருக்க வேண்டும் என்ற நிபந்தனையை பூர்த்தி செய்கின்றது. ஆனால், டீசல் வாகனமாக இருந்தால் 2.5 இலட்சம் கி.மீ ஓடியிருக்க வேண்டும் என்ற நிபந்தனையை பூர்த்தி செய்யவில்லை. மேலும், இவ்வாகனங்களை பழுது நீக்கம் செய்வது சிக்கனமாக இராது என்ற நிலையில், வாகனங்களை முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்ய தொழில்நுட்ப வல்லுநர் குழுக்களின் அறிக்கைகளில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே, கடலூர், வேலூர், திருவண்ணாமலை, ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கரூர், மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய 9 மாவட்டங்களிலுள்ள

40 ஊராட்சி ஒன்றிய தலைவர்களின் உபயோகத்தில் இருந்த 40 வாகனங்களை மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயக்குநரின் பரிந்துரையின்படி, வாகனம் மேற்குறிப்பிட்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள குறியீடுகளை கடக்காததால், தொழில்நுட்ப வல்லுநர் குழுவின் கருத்தினை ஏற்றுக்கொண்டு, மேற்படி வாகனங்களை முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்வதற்கு உரிய அரசாணையை பிறப்பித்திடுமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கோரியுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துரு அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. மோட்டார் வாகன பராமரிப்புத் துறை அலுவலக பொது மேலாளரின் பரிந்துரையில் இவ்வாகனங்களை பழுது நீக்கம் செய்வது சிக்கனமாக இராது என்ற நிலையில், கடலூர், வேலூர், திருவண்ணாமலை, ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கரூர், மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய 9 மாவட்டங்களிலுள்ள 41 வாகனங்களில் திருவண்ணாமலை மாவட்டம், அனக்காவூர் ஊராட்சி ஒன்றிய தலைவரின் வாகன எண்.TN.09 G 2187 Tata Spacio என்ற வாகனத்தினை தவிர்த்து ஏனைய 40 ஊராட்சி ஒன்றிய தலைவர்களின் உபயோகத்தில் இருந்த TN 09 G 2146, TN 09 G 2155, TN 09 G 2128, TN 09 G 2126, TN 09 G 2205, TN 09 G 2226, TN 09 G 2194, TN 09 G 2191, TN 09 G 2212, TN 09 G 2179, TN 09 G 2305, TN 09 G 2307, TN 09 G 2233, TN 09 G 2331, TN 09 G 2292, TN 09 G 2318, TN 09 G 2342, TN 09 G 2309, TN 09 G 2299, TN 09 G 2315, TN 09 G 2297, TN 09 G 2328, TN 09 G 2298, TN 09 G 2290, TN 09 G 2355, TN 09 G 2378, TN 09 G 2360, TN 09 G 2363, TN 09 G 2349, TN 09 G 2359, TN 09 G 2394, TN 09 G 2406, TN 09 G 2453, TN 09 G 2443, TN 09 G 2494, TN 09 G 2506, TN 09 G 2467, TN 09 G 2533, TN 09 G 2480 மற்றும் TN 09 G 2513 வாகனங்களை முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்து ஏலம் விடுவதற்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பெ.அமுதா
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரகம்,
சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
கடலூர்/ வேலூர்/ திருவண்ணாமலை/ ஈரோடு/ திருச்சிராப்பள்ளி,
கரூர்/ மதுரை/ தேனி /திண்டுக்கல்
இயக்குநர், தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை,சென்னை–42.
மாநில கணக்காயர், சென்னை–18.

**நகல்:–**
நிதி (ஊரக வளர்ச்சி) துறை, சென்னை–9.
உள் (போக்குவரத்து–4) துறை, சென்னை–9.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி துறை அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்
கோ.எண்.17043/மா.அ.தி3/2022

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

01.04.23
**பிரிவு அலுவலர்.**